மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் இந்த ஆரம்ப சுகாதார நிலையமே ஆரம்பிக்கவிருக்கிறோம். தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் என்ற பிரச்சினைக்கு உள்ளே போகாமல், இப்போது கட்டப்படுகிற ஆரம்ப சுகாதார நிலையம், இது வரையில் கட்டிய ஆரம்ப சுகாதார நிலையத்தை விட மாடர்னாக இருப்பதுடன், ஒரு தாலுக்கா மருத்துவமனக்கு உரிய சில அம்சங்களையும் கொண்டிருக்கும். அந்த மருத்துவமனையே தேவையான பணிகளைச் செய்யும் என்று கருதுகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி பெரிய மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக மாற்றுவதற்கு என்னென்ன அடிப்படைகள் தேவை? ஊராட்சிகள் தங்களுடைய பங்குக்கு என்ன செய்ய வேண்டும் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில் கொடுக்கலாம். இருந்தாலும் கொள்கைப் பிரச்சினையாக இருப்பதால், கேள்வி நேரத்தில் சொல்வது சரியாக இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உதகமண்டலம் அரசு தலைமை மருத்துவமனை.

*வினா எண், 488—திரு. கே. உச்சி: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர்: கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் உதகமண்டலம் தலைமை மருத்துவமனையிலுள்ள சிறப்பு வார்டுகளின் படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்தும் செய்நுறிப்பு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) உதகமண்டலம் தலைமை மருத்துவமனையில் மலைப் பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் வார்டின் மேல்தளத்தில் புதிதாக 15 படுக்கைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன இவைகள்,

ஏ வகுப்பு	1
பி வகுப்பு	2
சி வகுப்பு	12

இது விரைவில் செயல்படுத்தப்படும்.

1982 மார்ச் 16]

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பரந்த மலைவாசஸ்தலமான நீலகிரியில் சரியான மருத்துவமனை இல்லாததன் காரணமாக அங்கேயிருக்கிற மக்கள் கோவையில் உள்ள தனியார் மருத்துவமனைக்குச் சென்று அங்கே நிரம்பியிருப்பதைக் காண்கிறோம். அதற்குக் காரணம் சீனியர் டாக்டர் யாரும் இல்லை என்ற குறைதான். அங்கே சீனியர் டாக்டர்ஸ் போகும்படியாக ஒரு ஏற்பாட்டைச் செய்து அதற்காக அவர்களுக்கு சிறப்பு ஊதியம் தந்து ஊக்குவிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அங்கே இருக்கக்கூடிய மருத்துவமனையின் டிஸ்டிரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் என்ற வகையில் படுக்கைகளின் எண்ணிக்கை 331, அதுவும் அல்லாமல 40 படுக்கைகள் ஹில் ஏரியா டெவலப்மெண்ட் புரோக்ராம் என்று வைத்திருக்கிறோம். அதுவும் அல்லாமல் இப்போது தனியால் புதிதாக 15 படுக்கைகள், அடிஷனல் பெட்ஸ் என்ற வகையிக செய்திருக்கிறோம். அது மட்டும் அல்லாமல் இந்தப் பிரதேசத்தில் சம்மர் காலங்களில் ஜனத்தொகை ஜாஸ்தியாக வருகிற நேரத்தில் இன்டென்சிவ் கரோனரி கேர் யூனிட் ஆரம்பிக்கலாமா என்ற சிந்தனையோடு பல நிபுணர்களை அழைத்துப் பேசிக்கொண்டிருக்கிறோம். அதுவும் செயல்பட்டால் இந்தப் பிரச்னை இராது.

திரு. கு. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி ஒரு பெரிய மாவட்டம். ஏழை எளிய தொழிலாள மக்கள் மலைவாழ் மக்கள் 100 க்கு 90 சதவீதம் இருக்கும்படியான ஒரு மாவட்டம். அங்கேயிருக்கும்படியான அந்த மருத்துவமனையில் உள்ள படுக்கை விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது மிக மிகக் குறைவு. சென்னையில் இருக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய மருத்துவமனையின் 2 வார்டுகளுக்குமட்டுமே சமமானது. ஆகவே அங்கே அதிக அளவில் இன்னும் படுக்கை வசதிகளை ஏற்படுத்தினால்தான் அங்கேயிருக்கக்கூடிய மக்களின் தேவையை பூர்த்திசெய்வதாகும். மாண்புமிகு உறுப்பினர், சின்னராஜ் அவர்கள் சொன்னது போல, அங்கேயுள்ள மக்கள் கோயம்புத்தூர் மருத்துவமனைக்கு போகிற நிலைதான் இருக்கிறது. அந்த நிலையை மாற்றி, படுக்கை வசதிகளை அதிகப்படுத்தி, ஆப்பரேஷன் தியேட்டர் உட்பட, அதை பக்கா மருத்துவமனையாக மாற்ற முயற்சி செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 9·40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இந்த ஒரு மாவட்டத்திலுள்ள மாவட்ட தலைமை மருத்துவ மனையில் முழுமையான அளவில் 300 படுக்கைகள் உள்ளன. எல்லா மாவட்ட தலைமை மருத்துவ மனைகளிலும் 300 படுக்கைகள் இடை

யாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தின் அடிப்படையில், அதே உணர்வுகளின் அடிப்படையில், சில நாட்களுக்கு முன்பாக இந்த மருத்துவ மானியக் கோரிக்கை நடைபெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னால் ஒரு ரெவ்யூ மீட்டிங் வைத்து இப்படிப்பட்ட கருத்துக்கள் எல்லாம் சொல்லப்பட்டு ஏதாவது ஒரு வகையில் பரிகாரம் தேடவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அந்த அடிப்படையில் இன்டன்சிவ் கரோனரி கேர் யூனிட் ஆரம்பித்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறோம். அதை அங்கே ஆரம்பித்தால் நன்றாகயிருக்கும். அதற்காக முயற்சியை எடுத்துக் கொள்கிறோம்.

திரு. மு. அரங்கநாதன்: உதகை தலைமை மருத்துவமனையில் தோல், கண், காது, போன்றவற்றிற்கு ஸ்பெஷலிஸ்டுகளை நியமிக்க அரசு உத்தரவிடுமா? அங்கே ஸ்பெஷலிஸ்ட் இல்லாததால் அந்த மக்கள் வேறு ஊர்களுக்கு செல்ல வேண்டியிருப்பதால் அங்கே ஸ்பெஷலிஸ்ட்ஸ் நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ஒவ்வொரு மாவட்ட தலைமை மருத்துவ மனையிலும் கூட எல்லா ஸ்பெஷாலிட்டீஸ்-ம் இருக்க வேண்டும் என்பதற்காக நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். பார்ட் 2 ஸ்கீம்களைப் பார்த்தால் தெரியும். படிப்படியாக விரைவில் எல்லா மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் எல்லா ஸ்பெஷாலிட்டீஸையும் ஏற்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் இந்த மருத்துவமனையிலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் அரசு பொது மருத்துவமனை.

வினா எண், 489—டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராசிபுரம் அரசு பொது மருத்துவமனை 48 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இருந்தும் அங்கு பத்து படுக்கைகள் மட்டுமே இருப்பது அரசுக்குத் தெரியுமா;

(ஆ) ஆம் எனில், அம்மருத்துவமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?